செ.வெ.எண்.869 நாள்.22-11-2009

<u>அரசு செய்தி வெளியீடு</u>

**<u>22.11.2009</u>**

தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையே முல்லைப் பெரியாறு அணை பிரச்சினைக் குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருந்து வருகிறது. இவ் வழக்கில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் தற்போது ஐந்து உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட அரசியலமைப்பு அமர்வினை அமைத்துள்ளார்கள்.

2. இவ்வழக்கு தொடர்பாகவும் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பிரச்சினைகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில், சட்ட வல்லுநர்கள் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு ஒருங்கிணைத்தல், இது தொடர்பான நேர்வுகளை மேற்பார்வையிட்டு தொடர் நடவடிக்கை எடுத்தல், மைய அரசுடனும் கேரள மற்றும் பிற தொடர்புடைய மாநில அரசுகளுடனும் இப்பிரச்சினைகள் குறித்து தொடர்பு கொள்ளுதல் ஆகிய பணிகளை மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் மேற்கொள்வார்கள்.

தலைமைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.